



சக்கரத்தாழ்வார் சிலை (கி.பி. 17ம் நூற்றாண்டு) - திருமோகூர்
Sakkarathalvar Statue (17th Century A.D.) - Thirumohur - 20Km



காளமேகப் பெருமாள் கோயில் தெப்பக்குளம்
திருமோகூர் - 20 கி.மீ.
Kalamegaperumal Temple Heritage Tank
Thirumokur - 20 Km

திருமோகூர்

திருமோகூர் வைணவசமய வரலாற்றில் முக்கிய இடம்பெற்ற நூற்றெட்டு திவ்யதேசங்களில் ஒன்றாகும். எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரும் இத்திருத்தலத்தைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். வைணவ ஆச்சாரியாரின் திருவாய்மொழி நூற்றந்தாதியிலும் அழகியமணவாளப் பெருமாள் இயற்றிய ஆசார்யஹிருதயம் என்ற நூலிலும் திருமோகூர் காளமேகப்பெருமாள் சிறபித்துக் கூறப்பட்டுள்ளார். காளமேகப் புலவரின் தனிப்பாடலிலும் நாயக்கர்கால வைணவ சிற்றிலக்கியங்களிலும் காளமேகப்பெருமாள் போற்றிப் பாடப்பட்டுள்ளார்.
திருமோகூர் கோயிலிலுள்ள காளமேகப் பெருமாளின் தற்போதுள்ள விமானம் விசயநகர வேந்தர் காலத்தில் பதினாறாம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். அதற்கு முன்பு இக்கோயில் பாண்டியர்களாலும் சோழர்களாலும் உருவாக்கப்பட்டு விரிவாகக் கட்டப்பட்டிருக்கிறது. காளமேகப்பெருமாள் சன்னதி தவிர திருமோகூர் கோயிலில் பள்ளிகொண்ட பெருமாளுக்கும் மோகவைல்லித் தயாயாருக்கும் சக்கரத்தாழ்வார்க்கும் தனிச்சன்னதிகள் உள்ளன. திருமோகூர் கோயிலில் பள்ளிகொண்ட பெருமாளுக்கும் மோகனவல்லித் தாயாருக்கும் சக்கரத்தாழ்வார்க்கும் தனிச்சன்னதிகள் உள்ளன. திருமோகூர் கோயிலில் உள்ள பழமையான முதல் குலோத்துங்க சோழனின் சிதைந்துபோன கல்வெட்டு திருமோகூர் தெப்பக்குளப்பகுதியில் காணப்படுகிறது. கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்காலப்பாண்டியர் கல்வெட்டுகள் தென்புறத் திருச்சுற்றுச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளன. இவை இக்கோயிலுக்குத் திருப்பணிக்காக அளிக்கப்பட்ட நிலக்கொடை பற்றித் கூறுகின்றன. சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அவனது அதிகாரியாக விளங்கிய காங்கேயராயர் சக்கரத்தாழ்வார்க்குத் தனிக்கோயில் எடுப்பித்ததைக் தெரிவிக்கிறது. ‘திருமோகூர் வெளிப்புறமுள்ள உயரமான திருச்சுற்றுச் சுவரை 1700ல் மதுரைநாயக்க மன்னரின் தளவாய் நரசப்பையன் குமாரர் வேங்கடப்பன் கட்டினார் என்பதை அங்குள்ள கல்வெட்டு தெரிவிகிறது. திருமோகூர் பொருமாள் சன்னதி மகாமண்டபத்திலுள்ள கி.பி.1551ஆம் ஆண்டைச் சார்ந்த விசயநகரவேந்தர்காலக் கல்வெட்டுகள் காளமேகப் பெருமாளுக்கும் பள்ளிகொண்ட பெருமாளுக்கும் வழிபாட்டுச் செலவிற்காகச் சிவகங்கைப் பகுதியில் மானக்குழி என்ற ஊரைத் தானமாகத் தந்ததைக் கூறுகின்றன. பள்ளிகொண்ட பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டு பிற்காலப்பாண்டியர்காலத்தில் பெருமாள் திருக்கல்யாணம் மற்றும் வேட்டை உற்சவ நாட்களின் செலவிற்காகக் குந்திதேவிச் சதுர்வெதிமங்கலத்து நிலங்களின் வரிகள் தானமாகத் தரப்பட்டுள்ளன.

பெருமாள் சன்னதியில் கருடமண்டபத்தில் விசயநகரவேந்தர் காலத்து இரதி, மன்மதன் உருவங்களோடு இராமன், சீதை, இலட்சுமணன் ஆகியோர் சிற்பங்கள் உள்ளன. பள்ளிகொண்ட பெருமாள் கோயில் கி.பி.13ஆம் நூற்றாண்டில் எடுப்பிக்கப்பட்டுள்ளது. இங்கு பாம்பணை மீது பள்ளிகொண்ட பெருமாள் காட்சியளிக்கின்றார். அவரது பாதத்திற்கு அருகில் ஸ்ரீதேவியும், பூதேவியும், அமர்ந்துள்ளனர். பள்ளிகொண்ட பெருமாள் கோயிலின் முன்புறமுள்ள கம்பத்தடி மண்டபத்தில் பெருமளை நோக்கி வணங்கியவாறு மருதுபாண்டியர் சிற்பங்கள் தூண்களில் மிகப்பெரிதாகக் காட்சியளிக்கின்றன. அனுமார்கோயில் முன்புள்ள தூணில் காணப்படும் குலசேகரபாண்டியனின் கல்வெட்டு சௌந்தரராஜ ஜீயர் முயற்சியால் திருமோகூரில் திருமடைவளாகம் அமைக்கப்பட்டதைக் கூறுகிறது.